


**11. 03. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி, திருச்சி பஞ்சப்பூரில் ஐந்தாயிரத்து 655 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை இன்று தொடங்கி வைப்பதோடு புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்திலும் பிரதமர் உரையாற்றுகிறார்.

2. நீர்வளத்தை பாதுகாப்பது குடிமக்களின் மிக முக்கிய கடமை என்று குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

3. நாகை, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களில் 119 கோடி ரூபாய் மதிப்பில் மினி டைடல் பூங்காக்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டியுள்ளார்.

4. தமிழகத்தில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழித்தாளுடன் இன்று தொடங்கின.

5. ஸ்விஸ் ஓப்பன் பேட்மிண்டன் கலப்பு இரட்டையர் முதல்சுற்றில் ரோஹன் கபூர், ருத்விகா காதே இணை – தாய்லாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி, திருச்சி பஞ்சப்பூரில் இன்று மாலை நடைபெறும் நிகழ்ச்சியில் 5 ஆயிரத்து 655 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளை தொடங்கி

வைப்பதோடு, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறா◌ா◌்.

பெட்ரோலியம், இயற்கை எரிவாயு, சாலை, ரயில்வே உள்ளிட்ட பல துறைகளை உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் துவக்கி வைக்கிறா◌ா◌்.

சென்னை மணலி இந்திய எண்ணெய் கழகத்தின் மசகு எண்ணெய் ஆலை,

பிரதமா◌ின் ஊரக சாலை திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 370 கிலோ மீட்டர் தூரத்திற்கான சாலைகளை பிரதமர் துவக்கி வைக்கிறா◌ா◌்.

நீலகி◌ா◌ி, ஈரோடு மாவட்டங்களில் பாரத் பெட்ரோலியம் கழகத்தின் எரிவாயு விநியோக வலையமைப்பு,

கங்கைகொண்ட சோழபுரம் முதல் மீன்சுருட்டி சாலை வரையிலான கட்டுமான பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டுகிறார்.

மேலும் நாகர்கோவில் – சரளாபள்ளி,

போத்தனூர் - தன்பாத் அம்ரித் பாரத் விரைவு ரயில்கள்

ராமேஸ்வரம் – மங்களுரு

திருநெல்வேலி – மங்களுரு

மயிலாடுதுறை – திருவாருர் – காரைக்குடி விரைவு ரயில் சேவைகளையும் பிரதமர் இன்று நாட்டிற்கு அர்ப்பணிக்கிறா◌ா◌்.

இந்நிகழ்வுகளை தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் பொதுக்கூட்டத்தில் பிரதமர் உரை நிகழ்த்தவுள்ளார்.

பிரதமரின் வருகையை ஒட்டி திருச்சி மாநகரம் விழாக்கோலம் பூண்டுள்ளதோடு மாவட்டம் முழுவதும் பலத்த பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது.

முன்னதாக பிரதமர் கேரளம் மாநிலம் எர்ணாகுளத்தில் 10 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டப்பணிகளை இன்னும் சற்று நேரத்தில் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

நீர்வளத்தை பாதுகாப்பது நாட்டு மக்களின் மிக முக்கிய கடமை என்று குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஜல்ஜீவன் நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், இன்றியமையா சொத்தாக நீரை கருதி எதிர்கால தலைமுறையினர் நீரை பாதுகாப்பதற்கான வழிமுறைகளின் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

நீடித்த நிலையான எதிர்காலத்திற்கு தண்ணீரை வாழ்க்கையின் ஒரு அங்கமாக கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ஊரக இளைஞர்களுக்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த பெண்களுக்கும், நீர் பராமரிப்பு மற்றும் விநியோகம் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஊரகப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை உருவாக்க இது வழிகோலும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பல்பரிமான முயற்சிகளால் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் நீர்வள பாதுகாப்பின் அவசியத்தை வலியுறுத்துவது தற்போதைய தேவை என்றும் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அஸ்விணி வைஷ்ணவ்

உலக நாடுகளை ஒப்பிடும் போது இந்தியாவில் குறைந்த செலவில் இணையதள சேவைகளை பெற முடிவதாக மத்திய மின்னணு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதிலளித்த அவர், சர்வதேச நாடுகளுடன் ஒப்பிடுகையில், ஒரு ஜிகா பைட்டுக்கான இணையதள செலவு 25 மடங்கு மலிவாக நம்நாட்டில் உள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டுகளில், டிஜிட்டல் உள்ளடக்கத்திற்காக பிரதமர் பணியாற்றி உள்ளதாக எடுத்துரைத்த அவர், இணையதள இணைப்புகளை முன்னெடுத்தது, அனைவருக்கும்

இணையதள சேவைகள், பொது டிஜிட்டல் கட்டமைப்பை வலுப்படுத்தப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

ரயில் பாதைகளில் தானியங்கி பாதுகாப்பு முறையான கவாச் தொடர்பான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப் படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விலங்குகளை பாதுகாக்கவும் ரயில்வே தனி கவனம் செலுத்துவதாக திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

## நம்பிக்கையில்லா தீர்மானம்

மக்களவை தலைவர் திரு. ஓம் பிர்லா மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் குறித்த விவாதம் மக்களவையில் இன்று மீண்டும் தொடங்கியது.

இந்த விவாதத்தின் மீது பேசிய பி.ஜே.பி. உறுப்பினர் திரு. ரவி சங்கர் பிரசாத், எதிர்கட்சிகளை சேர்ந்த சில தலைவர்களை திருப்தி படுத்துவதற்காகவே இத்தீர்மானம் கொண்டுவரப் பட்டதாக கூறினார்.

நாட்டின் அரசியல் சாசனம், நாடாளுமன்றம், தேர்தல் ஆணையத்திற்கு எதிராக, எதிர்கட்சி தலைவர் திரு. ராகுல் காந்தி கருத்துக்களை தெரிவிப்பதாக குற்றம் சாட்டினார்.

எதிர்கட்சி தலைவரின் பேச்சு பொறுப்பற்றதாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

கடந்த 72 ஆண்டுகளில் மக்களவை தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மீதான விவாதம் இரண்டுமுறை மட்டுமே நடைபெற்றிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக நேற்று இந்த தீர்மானத்தை முன்மொழிந்த காங்கிரஸ் உறுப்பினர் திரு. முகமது ஜாவத், மக்களவையில் அவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா பாரபட்சமற்ற நிலையை பராமா◌ிக்க தவறிவிட்டதாக குற்றம் சாட்டினா◌ா◌்.

❖❖❖❖❖❖❖❖❖

## மக்களவை

சமையல் எரிவாயு விலையேற்றம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் அமளி காரணமாக மக்களவை இன்று நண்பகல் வரை ஒத்திவைக்கப் பட்டது.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின் போது சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து விவாதம் நடத்த வேண்டும் என்று எதிர்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து அமளியில் ஈடுபட்டனர்.

அவை நடத்தும் அலுவலர் திலீப் சைக்கியா அமளியினூடே அவையை நடத்த முயன்றார்.

ஆனால் கூச்சல் தொடரவே அவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

பிரவீன் கந்தல்வேல்

நாட்டில் போதுமான அளவு எண்ணெய் கையிருப்பில் உள்ளதாக அகில இந்திய வர்த்தக கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், பி.ஜே.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. பிரவீன் கந்தல்வேல் தொிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அத்தியாவசிய பொருட்கள் கையிருப்பை உறுதி செய்யும் பொறுப்பு பல்வேறு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சமூக வலைதளங்களில் பரப்பப்படும் வதந்திகளை யாரும் நம்பவேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

சக்கரபாணி

நாட்டில் வணிக எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு பிரச்சனை குறித்து ஆராய மத்திய அரசு குழு ஒன்றை அமைத்துள்ள நிலையில், மாநில உணவுத்துறை அமைச்சர் திரு. சக்கரபாணி தமிழகத்தின் நிலை குறித்து ஆலோசனை மேற்கொள்கிறார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு தொடர்பாக உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் எண்ணெய் நிறுவன பிரதிநிதிகளுடன் சென்னை தலைமை செயலகத்தில் இந்த ஆலோசனை இடம்பெறுகிறது.

இதனிடையே கோவையில் உடனடி சமையல் எரிவாயு தட்டுப்பாடு எதுவும் இல்லை என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பவன்குமார் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல் ஆணையம்

தமிழகம், புதுச்சோி, கேரளம், மேற்குவங்கம், அசாம் மாநில சட்டப்பேரவை தேர்தல் தேதியை இறுதி செய்வது குறித்து தலைமை தேர்தல் ஆணையம் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொள்கிறது.

இம்மாநிலங்களில் தேர்தல் முன்னேற்பாடுகளை கடந்த சில நாட்களாக தேர்தல் ஆணையம் ஆய்வு செய்த நிலையில், மத்திய தேர்தல் பார்வையாளர்கள் மாநிலத்தின் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து தேர்தல் தேதி அட்டவணை குறித்து ஆராய்கிறது.

இதனிடையே ராணிப்பேட்டை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் அமைதியாக தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில் மத்திய பாதுகாப்பு படை வீரர்களின் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாகை, புதுக்கோட்டை, கரூர் மாவட்டங்களில் 119 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பில் மினி டைடல் பூங்காக்களுக்கு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டில் மின்சாரத்துறை வளர்ச்சி மற்றும் பசுமை எரிசக்தி பயன்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் மாநில அரசுக்கும்,

அமொிக்காவின் கலிஃபோர்னியா பல்கலைக் கழகம் மற்றும் பெர்க்லி இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

மருத்துவர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 250 சிறப்பு மருத்துவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

முன்னதாக அகில இந்திய குடிமைப்பணி தேர்வில் தமிழகத்தை சேர்ந்த மாணாக்கர் அதிகளவில் வெற்றி பெற வேண்டுமென முதலமைச்சர் வலியுறுத்தி உள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

10-ம் வகுப்பு பொதுத்தேர்வு

தமிழகத்தில் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழித்தாளுடன் இன்று தொடங்கின.

மொழித்தாள் தேர்வு எளிதாக இருந்ததாக மாணாக்கர் எமதுசெய்தி பி◌ா◌ிவிடம் தொ◌ிவித்தனர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நீட்

நாடுமுழுவதும் MBBS, BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளில் சேர்வதற்கான நீட் நுழைவு தேர்விற்கு விண்ணப்பிக்க இன்று கடைசிநாளாகும்.

இந்நுழைவுத் தேர்வு வரும் மே மாதம் 3-ம் தேதி நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிண்டன்

ஸ்விஸ் ஓப்பன் பேட்மிட்டன் ஒற்றையர் பி◌ா◌ிவுகளில் ஆயுஷ் ஷெட்டி, கிரண் ஜா◌ா◌்ஜ்,

தன்வி ஷர்மா, உன்னடி ஹுடா ஆகியோ◌ா◌் இன்று களமிறங்குகின்றனர்.

கலப்பு இரட்டையர் முதல்சுற்றில் ரோஹன் கபூர், ருத்விகா காதே இணை – தாய்லாந்து இணையை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச்சுற்று இறுதி போட்டியில் ஹைதராபாத்தில் இன்று இரவு ஏழரை மணிக்கு இந்தியா வேல்ஸை எதி◌ா◌்கொள்கிறது.

B பிரிவில் 4 புள்ளிகளுடன் தற்போது முதலிடத்தில் உள்ள இந்தியா, வேல்ஸ் அணியை தோற்கடித்தாலோ அல்லது டிரா செய்தாலோ அரையிறுதிக்கு முன்னேறும்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.